# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,419 — 1938 ௵ மார்கழி௴ 9 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரங்கள்.

1901 ம் ஆண்டின் நாய்களைப் பதிவுசெய்தலைப்பற்றிய சட்டம்.

1901 ம் ஆண்டின் நாய்களைப் பதிவுசெய்தலைப்பற்றிய சட்டத்தின் 5 பிரிவின்படி தத்துவம் பெற்ற கண்டிப் பிரிவிலுள்ள சௌக்கியாதார சங்கத்தலைவரால் ஏற்படுத்தப்பட்ட ஒழுக்கவிதி.

ரீ. எ. ஹொட்சன்,
கண்டிப் பகுதி,
சௌக்கியாதார சங்கத் தலைவர்.

கண்டிக் கச்சேரி,
1938 ம் ஆண்டு கார்த்திகை௴ 30 ந் உ.

ஒழுக்க விதி.

1901 ம் ஆண்டின் நாய்களைப் பதிவு செய்தலைப்பற்றிய சட்டத்தின் 5ம் பிரிவின்படி கண்டிப் பிரிவிலுள்ள சௌக்கியாதார சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டு, 1928 ம் ஆண்டு மாசி மாசம் 3 ந் திகதி 7,627 ம் இலக்கமுடைய இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 1937 ஆண்டு மாசி மாசம் 5 ந் திகதி 8,270 ம் இலக்கமுடைய இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகையில் திருத்தம் செய்யப்பட்டுமுள்ள ஒழுக்க விதிகளுல் முதலாம் ஒழுக்க விதியில் "ஒரு ரூபாயும்" "ஒரு ரூபாயும் ஐம்பது சதமும்" என்கிற சொற்களை முறையே ஐம்பது சதமும் மூன்று ரூபாயும் என்று மாற்றப்பட்டது.

---

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்க இந்திய வேலையாட்களைப்பற்றிய சட்டம்.

அறிக்கைப்பத்திர இலக்கம் 206.

தோட்டச்சம்பளக் காரியசபை, கண்டி.

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டத்தின் 8 (1) ம் பிரிவின்படி இதில் குறிக்கப்பட்ட பிரிவுகளின், அதாவது :—

(i) கண்டி அரசிறை வருமானப் பகுதி,

(ii) நுவரெலியா அரசிறை வருமானப்பகுதியைச்சேர்ந்த கங்குபலாத்தைக் கோறளை, டியத்திலக கோறளை, கன்னுவ கோறளை, கொகக்கா கோறளையும்,

(iii) நுவரெலியா அரசிறை வருமானப் பகுதியைச்சேர்ந்ததும் படிய பெலெல்லாவையிலிருந்து எல்லாமுல்லாவுக்குப் போகும் தெருவின் மேற்குப் பக்கமாகவும், இன்னும் கலெல்ல கிருக்கின் குறிப்பு ஸ்தானத்துக்கும், குறுஅத்தேகந்தையின் குறிப்பு ஸ்தானத்துக்கும் வடமேற்கிலிருந்து தென்கிழக்காய் ஓடி மண்டாரநுவர தோட்டத்தையும், குட்வூட் தோட்டத்தையும் பிரிக்கும் கீற்றுக்குட்பட்டதுமான உடகம்பஹா கோறளையின் பாகமுமான,

பகுதியின் தோட்டச்சம்பளக் காரியசபையார், 1939 ம் ௵ ஜனவரி௴ 12 ந் திகதி காலை 10 மணிக்கு தங்களின் நியாயாதிகார எல்லைக்குள் உள்ள கீழ்பகுதியிலும், மத்திமப்பகுதியிலும் உள்ள எல்லாத் தோட்டங்களில் இதற்கு முன்னே தீர்மானிக்கப்பட்ட ஆகக்குறைந்த வீதச்சம்பளங்களை மேற்கூறிய சட்டத்தின் 8 (3) ம் பிரிவினுற் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினைக்கொண்டு மாற்ற எண்ணியிருப்பதை இத்தா லறிவிக்கப்படுகின்றது.

இக்காரியத்தில் சம்பந்தமுடைய எவரும் யாதும் சொல்லவேண்டுமென்று விரும்பினுல் தானும் சமுகமாயிருக்க எண்ணுகிறதைப்பற்றிக் காரியசபைத் தலைவருக்கு அறிவிக்க வேண்டும்.

ரீ. எ. ஹொட்சன்,
தோட்டச்சம்பளக் காரியசபைத் தலைவர், கண்டி.

கண்டிக் கச்சேரி,
1938 ம் ௵ டிசெம்பர்௴ 5 ந் உ.

---

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்க இந்திய வேலையாட்களைப்பற்றிய சட்டம்.

அறிக்கைப் பத்திரம் 211.

தோட்டச்சம்பளக் காரியசபை, குருணுக்கல்.

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டத்தின் 8 (1) ம் பிரிவின்படி குருணுக்கல் அரசிறை வருமானப் பகுதியின் தோட்டச்சம்பளக்காரியசபையார் 1939 ம் ௵ ஜெனவரி௴ 25 ந் தேதி தங்களின் நியாயாதிகார எல்லைக்குள் உள்ள கீழ் பகுதியிலும் மத்திமப்பகுதியிலும் உள்ள எல்லாத் தோட்டங்களில் இதற்கு முன்னே தீர்மானிக்கப்பட்ட ஆகக்குறைந்த வீதச் சம்பளங்களை மேற்கூறிய சட்டத்தின் 8 (3) ம் பிரிவினுற் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினைக்கொண்டு மாற்ற எண்ணியிருப்பதை இத்தா லறிவிக்கப்படுகின்றது.

இக்காரியத்தில் சம்பந்தமுடைய எவரும் யாதும் சொல்லவேண்டுமென்று விரும்பினுல் தானும் சமுகமாயிருக்க எண்ணுகிறதைப்பற்றிக் காரிய சபைத்தலைவருக்கு அறிவிக்க வேண்டும்.

என். ஈ. என்ஸ்ற்,
தோட்டச்சம்பளக் காரியசபைத் தலைவர், குருணுக்கல்.

குருணுக்கல் கச்சேரி.
1938 ம் ௵ டிசெம்பர்௴ 5 ந் உ.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு போட் கொமிஷன் தேவைக்குவேண்டிய காணி சென்ற் அந்தோனிஸ் சேர்ச் கொச்சிக்கடை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 933. குறிச்சி—கொட்டாஞ்சேனையும் சென்ற் போல்ஸ் வடக்கு உவாட்டும்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கொச்சிக்கடைத் தெருவில் இறைவரி இலக்கம் 161 கொண்ட ஆதனத்தின் பகுதி | தோட்டம், 25 வருஷந்துவங்கி 30 வருஷம்வரை சென்ற 4 தென்னையும், 3 வருஷந்துவங்கி 5 வருஷம்வரை சென்ற 5 தென்னையும், 15 வருஷம்வரை சென்ற 1 பாம் மரமும், 3 வருஷஞ்சென்ற 1 மாவும், ஒரு இரும்பு வேலியின் பகுதியுமுள்ளது | மேற்றிராணியார், கொழும்பு | 0 | 0 | 4·14 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆண்டு (ஜனவரி) தை மாசம் 9 ந தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1938 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழிமீ 6 ந உ.

ஆர். மொலிபெனி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வத்தலையில் தெயின் றோட்டுச் சந்தியை அகலித்தற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 940. குறிச்சி—வத்தலை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | இறைவரி இலக்கம் 410 கொண்ட ஆதனத்தின் பகுதி | றோட்டின் பகுதி .. | றோமன் கத்தோலிக்க மிஷன் (திறஸ்டி) றெவறண்ட் பாதர் ஏ. யேனே, செயின்ற் அனேஸ், வத்தல | 0 | 0 | 0·5 |
| 2 | மகாவத்த, இறைவரி இலக்கம் 411 கொண்ட ஆதனத்தின் பகுதி | தெயின் றோட்டின் பகுதி .. | ஷெ | 0 | 0 | 17 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்காடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆண்டு (ஜனவரி) தை மாசம் 16 ந தேதியிலன்று 11 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1938 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழிமீ 6 ந உ.

சீ. ஈ. டில்னி,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிற்றிப்பனை வீதிய சேர்ச் றோட்டு அகலித்தற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரமதபடத்து இல : A 927. குறிச்சி—பிற்றிப்பனை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கங்கபொடவத்த .. | தென்னங்காணி, 35 வருஷஞ்சென்ற 2 தென்னையும், 15 வருஷஞ் சென்ற 3 தென்னையுமுள்ளது | லியனகே ஏபிரகாம் பெர்னுந்து, பிற்றிப்பனை | 0 | 0 | 4·10 |
| 2 | ஷெ .. | தென்னங்காணி, 20 வருஷஞ்சென்ற 11 தென்னையுள்ளது .. | டி. பிலிப்பெறேரு, பிற்றிப்பனை | 0 | 0 | 2·65 |
| 3 | ஷெ .. | தென்னங்காணி, 70 வருஷஞ்சென்ற 1 தென்னையுள்ளது .. | கே. அந்தோனி பேர்னுந்து, பிற்றிப்பனை | 0 | 0 | 3·30 |
| 4 | ஷெ .. | தென்னங்காணியின் பகுதி (செய்கை இல்லை) .. .. | பி. மனுவல் பேர்னுந்து, இது பி. இஸ்தாக்கி பேர்னுந்துவால் உரித்துப்பேசப்படுகிறது, இரு பேரும், பிற்றிப்பனை | 0 | 0 | 4·27 |
| 5 | ஷெ .. | தண்ணீர்க் குழி, ஒரு இரும்புக்கம்பி வேலியின் பகுதியுள்ளது | ஷெ | 0 | 0 | 1·27 |
| 6 | ஷெ .. | தென்னங்காணி, 75 வருஷஞ்சென்ற 1 தென்னையும், 20 வருஷந் துவங்கி 25 வருஷம்வரை சென்ற 3 தென்னையும், ஒரு இரும்புக் கம்பி வேலியின் பகுதியுமுள்ளது | பி. இஸ்தாக்கி பேர்னுந்து, பிற்றிப்பனை | 0 | 0 | 3·05 |
| 7 | ஷெ .. | தென்னங்காணி, 20 வருஷந்துவங்கி 25 வருஷம்வரை சென்ற 2 தென்னையும், 60 வருஷஞ்சென்ற 2 தென்னையும், 1 வருஷஞ் சென்ற 1 தென்னங்கன்றும், 2 வருஷம்துவங்கி 8 வருஷம்வரை சென்ற 20 கமுகுவும், ஒரு இரும்புக் கம்பிவேலியின் பகுதியு முள்ளது | எல். மேறியா மடலேன பேர்னுந்து, பிற்றிப்பனை | 0 | 0 | 3·17 |
| 8 | ஷெ .. | தென்னங்காணி, 25 வருஷஞ்சென்ற 1 தென்னையுள்ளது .. | பி. இஸ்தாக்கி பேர்னுந்து, பிற்றிப்பனை | 0 | 0 | 1 |
| 9 | ஷெ .. | தென்னங்காணி, 60 வருஷஞ்சென்ற 1 தென்னையுள்ளது .. | கே. மைக்கல் பேர்னுந்து, பிற்றிப்பனை | 0 | 0 | 1·50 |
| 10 | ஷெ .. | தென்னங்காணி, 70 வருஷஞ்சென்ற 2 தென்னையும், 8 வருஷஞ் சென்ற 1 தென்னையும், 15 வருஷஞ்சென்ற 2 தென்னையுமுள்ளது | லியனகே சவரியான பேர்னுந்து, பிற்றிப்பனை | 0 | 0 | 3·80 |
| 11 | ஷெ .. | தென்னங்காணி, 8 வருஷஞ்சென்ற 1 தென்னையும், 30 வருஷஞ் சென்ற 1 தென்னையுள்ளது | லியனகே சவறியான பேர்னுந்து, பிற்றிப்பனை | 0 | 0 | 1·63 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மநதிராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆண்டு (ஜனவரி) தை மாசம் 24 ந தேதியிலன்று 9.30 மணிக்கு பிற்றிப்பனை வீதிய சேர்ச் மிஷன் வீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1938 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழிமீ 6 ந உ.

சீ. ஈ. டில்னி,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சீயஞ நிலமகாற எஸ். எம். பாடசாலேக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து A 937. குறிச்சி—நிலமகாற.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | அம்பகஹவத்த .. | தோட்டம், 2 வருஷந்துவங்கி 10 வருஷம்வரை சென்ற 1 மாவும், 1 பலாவும், 1 அரசமரமும், 1 கசுமரமும், 2 கொடப்பொருமாமும், 1 வெறளு மரமும், ஒரு ஓலேயால் வேய்ந்த கட்டடமும் (பாடசாலே) ஓலேயால் வேய்ந்த ஒரு மண்கறசூசும், ஒரு கிணறுமுள்ளது | எஸ். ஈ. ஆர். குணசேகர, வீ. ஏ. உறுவல பேருவ, உடத்துத்திறிப் பிற்றிய, ஆர். ஓ. | 0 1 24·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனேசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறு என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனேக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஞு (ஜனவரி) தை மாசம் 16 ந் தேதியிலன்று 11-30 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களேயும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1938 ம் ஞு (டிசெம்பர்) மார்கழிமீ 6 ந் உ.

சீ. ஈ. டில்னி,
மேலதி உதவி அரசாட்சி ஏசண்டு.

———

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டெல்கல பள்ளிக்கூட தோட்டத்தைப் பெருப்பிக்கிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளே, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 670. குறிச்சி—டெல்கல.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | லியனகுறகேவத்த அல்லது சீபயலகேவத்த | 3–15 வயதுள்ள 28 தென்னேகளும், 15–60 வயதுள்ள இரண்டு பிலாக்களும், 8 வயதுள்ள 4 கமுகுவும், 6 வயதுள்ள ஒரு பிலிங் மரமும், 6 வயதுள்ள ஒரு ஜம்புமரமும் உள்ள தென்னந்தோட்டம் | டெல்கலவிலிருக்கும், எச். ஜி. ஜயசேன வும், எச். அண்டிறியாஸ் அப்புவும், எச். லோலறட்னவும் | 0 0 39·1 |
| 2 | குனுககேஞ .. | 20 வயதுள்ள 5 தென்னேகளும், 6 வயதுள்ள 29 தென்னேகளும், 20 வயதுள்ள ஒரு பிலாமரமும், 3 வயதுள்ள ஒரு பப்பாமரமும் உள்ள தென்னந் தோட்டம் | டொன்டிரு கப்புகமவிலிருக்கும் டொன் அன்டிறியாஸ் அளகக்கூன் | 0 1 0·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனேசெய்திருப்பதனுல் அக்காணிகளே ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனேக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஞு (ஜனவரி) தை மாசம் 7 ந் தேதியிலன்று காலே 9.30 மணிக்கு டெல்கல பள்ளிக்கூடத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துக்ளின் தொகையையும் விவரங்களேயும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1938 ம் ஞு (டிசெம்பர்) மார்கழிமீ 5 ந் உ.

எம் ரூஜேந்திரா,
சேர்க்கப்பட்ட உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்தறை.

———

**1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாவுல்ல இஸ்பிறிங்வலி றேட்டில் 1½ மையிலடியில் றேட்டுச் சேமித்தலுக்குரிய மூலேயை திருத்துதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—**

பிரதமப்படத்து இல : 279, அட்டவணே 4. குறிச்சி—கவறவெல.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 385 | தவலமேமெடபோலவத்த அல்லது தவலன்கும்புறேவத்த | வெறும் பூமி .. | கவறவெலயிலிருக்கும் டி. எஸ். விமலசூரிய | 0 0 8 |

**எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனேசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனேக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.**

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஞு (ஜனுவரி) தைமீ 16 ந் தேதியிலன்று பிற்பகல் 3 மணிக்கு வதுளேக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களேயும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

**வதுளேக் கச்சேரி,**
1938 ம் ஞு (டிசெம்பர்) மார்கழிமீ 5 ந் உ.

என். ஜே. லடிங்ரன்,
ஊவா அரசாட்சி ஏசண்டு.

———

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.